# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.1 என்னை நானே ஏற்றுக்கொள்ளுதல்




**வேத வசனம்:** உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

*1 கொரி 6:19,20*

**அறிக்கை:** என்னை மீட்கும்படி இயேசு விலைக்கிரயம் செலுத்திவிட்டதால் நான் என்னை நேசிக்கிறேன்.

**சத்தியம்:** நாம் பாவிகளாயிருக்கும்போதே இயேசு கிறிஸ்து நமக்காக மரித்தார். மனிதக்குலத்தை மீட்கும்படியாகத் தேவன் எவ்வளவு பெரிய விலையைச் செலுத்தினார் என்பதை இங்கு பார்க்கப்போகிறோம். தேவனுடைய அன்பினால் நாம் நம்மையே ஏற்றுக்கொள்ள முடிகிறது.



### வேதப் பகுதி: 1 யோவான் 4:8-12

**பாடம்**

**1. சிறந்த மற்றும் தியாக அன்பு:** நம் தவறுகளால் தேவன் நம்மை நேசிப்பது இல்லை என்று நாம் எண்ணிக்கொள்ளுகிறோம். தேவன் மெய்யாகவே நம்மை நேசிக்கிறவர் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். வேதாகமத்தில் ரோமர் 5:8ல் நாம் பாவிகளாக இருக்கும்போது தான் கிறிஸ்து இயேசு நமக்காக மரித்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. “வசனம்” (ரோமர் 5:8., ஏசாயா 53:7-9)

**2. தேவன் மனிதரை அதிகமாக நேசிக்கிறார்:** ஓர் ஆழமான சம்பவம்: பல ஆண்டுகளுக்கு முன் கொரிய தேசத்தில் கடுமையான குளிரில் ஒரு பெண் தன்னுடைய குழந்தையை கதகதப்பாக வைத்திருப்பதற்காகத் தான் அணிந்திருந்த உடையைக் கழற்றி குழந்தைக்கு அணிவித்தாள். அதனால் அவள் உறைந்துபோய் மரித்தாள். குழந்தை பிழைத்தது. அந்தத் தாயின் அன்பு கர்த்தராகிய இயேசு நம்மை மீட்பதற்காகத் தன்னைத் தியாகம் செய்ததை நினைப்பூட்டுகிறது. தேனாகிய கர்த்தர் தம்முடைய குமாரனாகிய இயேசுவை ஒரு பலி ஆடாக உலகிற்கு அனுப்பி நம்முடைய பாவங்களுக்காகப் பலியாக்கினார். அவரை விசுவாசிப்பவர்கள் மீட்பைப் பெற்றுக்கொண்டு அவருடைய பிள்ளைகளாக மாறுகிறோம்.

**3. மனச்சோர்வு மற்றும் தாழ்வான சுயமதிப்பீடு:** இந்த உலகில் அநேகர் மனஅழுத்தத்திலும் சுய பரிதாபத்திலும் சிக்குண்டு துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஹாங்காங் நகரில் 1000 வாலிபர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 40 சதவீதத்தினர் எப்போதும் மன துயரத்தில் வாழுவதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் அனைவரும் தாழ்வு மனப்பான்மையில் சிக்கித்தவிக்கிறார்கள். அவர்களுடைய தாழ்வு மனப்பான்மைக்குக் காரணமாகத் தங்களுடைய தவறுகளையும் குடும்பப் பின்னணிகளையும் குறிப்பிடுகிறார்கள்.

**4. கர்த்தருக்குள் சுயத்தை ஏற்றுக்கொள்ளுதல்:** நாம் அதிக விலைக் கிரயத்தில் மீட்கப்பட்டவர்கள் என்று வேதம் குறிப்பிடுகிறது. தேவன் நம்மை நேசிப்பதால் நம்மைக் குறித்த தாழ்வு மனப்பான்மை நமக்கு இருக்கக்கூடாது. பிறருடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. (எரேமியா 31:3)

**5. என்னையே அதிகமாக நேசித்துக்கொண்டிருத்தல்:** நாம் அனைவரும் நீதிமான்கள் அல்ல. நாம் தவறுகள் செய்து தேவ மகிமையை இழந்தவர்கள் என்று வேதப்புத்தகம் சொல்லுகிறது. நம் இருதயம் கற்றுக்கொள்ள ஆர்வம் காட்டும் என்றால் தேவன் நம்மை உருமாற்றவும், நம்மைக்குறித்து நாமே நல் மதிப்புகள் கொண்டவர்களாகவும் இருக்கும்படி விரும்புகிறார். தேவன் நம்மை மாற்றும்படி நாம் நம்மை ஒப்புக்கொடுத்தோம் என்றால் நம்மை நாம் நேசிப்பதையும், நாம் மகிழ்ச்சியாய் வாழுவதையும் அறிந்துகொள்ளுவோம். (ரோமர் 3:23)

**முடிவுரை:** மனிதருடைய புகழ்ச்சியைவிட தேவனுடைய அங்கிகாரமே முக்கியமானது. இயேசு கிறிஸ்துவின் வழியாய் தேவன் நம்மீது கொண்ட அன்புக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். அது நம்மீது நமக்கு நன்மதிப்பையும், நம்மை நாமே ஏற்றுக்கொள்ளவும் செய்தது.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.